# குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஊத்தங்கரை

## முன்னிலை: திரு.D.சரவணன், B.A.,B.L.
## நீதித்துறை நடுவர், ஊத்தங்கரை

## 2026ம் ஆண்டு, ஏப்ரல் மாதம் 18–ம் நாள், சனிக்கிழமை

## ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 44/2018
**CNR NO: TNKI12-000415-2018**

அரசுக்காக:–
காவல் ஆய்வாளர்,
ஊத்தங்கரை காவல் நிலையம்,
குற்ற எண்.52/2018 ......குற்றமுறையிடுபவர்.

/எதிர்/

சரவணன் (30), த/பெ.ராஜா .....குற்றஞ்சாட்டப்பட்டவர்.

இவ்வழக்கு 07.05.2018 அன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை – 1 திருமதி.K. ஜெயந்தி அவர்களும் எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. G.வஜ்ஜிரவேல் அவர்கள் முன்னிலையாகி நடத்திட இரு தரப்பு வாதுரைக் கேட்கப்பட்டு, சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் கவனமாக பரிசீலிக்கப்பட்டு, நன்கு ஆராய்ந்த பின்னர் இன்று, இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கிடும்.

### தீர்ப்புரை

கடந்த 04.02.2018ம் தேதி மாலை சுமார் 4.50 மணியளவில் ஊத்தங்கரை–திருப்பத்தூர் செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் அருணபதி பிரிவு பாதை அருகில் இறந்துபோன கோட்டீஸ்வரன் என்பவர் அவருக்கு சொந்தமான இருசக்கர வாகனம் TVS SCOOTY PEP TN 24 P 1833 ல் தனது மனைவி வனஜாவை பின்னால் உட்காரவைத்துக்கொண்டு

அருணபதிக்கு செல்ல சாலையின் இடது பக்கம் இருந்து வலது பக்கம் திரும்பி சென்றுகொண்டிருக்கும்போது அவருக்கு பின்னால் வந்து கொண்டிருந்த எதிரி தனது ASHOK LEYLAND DOST TN 83 A 7822 வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து கோட்டீஸ்வரன் ஓட்டி சென்ற இருசக்கர வாகனத்தின் பின்பக்கம் மோதி விபத்து ஏற்படுத்தியும், எதிரி ஏற்படுத்திய விபத்தில் சாட்சி வனஜாவுக்கு வலது, இடது முழங்கை மற்றும் பின்பக்க முதுகில் சிராய்பு காயம் ஏற்படுத்தியும், எதிரி ஏற்படுத்திய விபத்தில் கோட்டீஸ்வரன் இருசக்கர வாகனத்தில் இருந்து தூக்கி வீசப்பட்டதில் பின்பக்க தலையில் அடிப்பட்டு பலத்த இரத்தகாயம் ஏற்பட்டு அதனால் மரணத்தை உண்டாக்கியதாகவும் எதிரி மீது ஊத்தங்கரை காவல் ஆய்வாளர் இ.த.ச. பிரிவுகள் 279, 337, 304(A)ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. இவ்வழக்கில் எதிரி முன்னிலையானதும், எதிரிக்கு அரசுத்தரப்பு வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச. 207 பிரிவின் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

3. எதிரிக்கு நகல்கள் வழங்கிய பின்பு, எதிரியிடம் குற்றம் பற்றி வினவிய போது, எதிரி குற்றத்தை மறுத்து குற்றவாளி இல்லை என்றார். இருதரப்பும் கேட்டும் வழக்காவணங்களைப் பரிசீலனை செய்தும், எதிரி மீது குற்றச்சாட்டுகள் வனைய முதல் நோக்கில் போதுமான ஆரம்ப ஆதாரங்கள் இருந்ததால், எதிரி மீது 279, 337, 304(A) இ.த.ச.–ன் படியும், குற்றச்சாட்டுகள் வனைந்து படித்துக் காட்டி விளக்கி கூறி கேள்வி கேட்டபோது, எதிரி மீண்டும் குற்றங்களை மறுத்து குற்றவாளி இல்லை என்றார்கள்.

4. இவ்வழக்கில் அரசுத்தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.7 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ10

வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**<u>அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்:-</u>**

5. கடந்த 04.02.2018ம் தேதி மாலை சுமார் 4.50 மணியளவில் ஊத்தங்கரை-திருப்பத்தூர் செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் அருணபதி பிரிவு பாதை அருகில் இறந்துபோன கோட்டீஸ்வரன் என்பவர் அவருக்கு சொந்தமான இருசக்கர வாகனம் TVS SCOOTY PEP TN 24 P 1833 ல் தனது மனைவி வனஜாவை பின்னால் உட்காரவைத்துக்கொண்டு அருணபதிக்கு செல்ல சாலையின் இடது பக்கம் இருந்து வலது பக்கம் திரும்பி சென்றுகொண்டிருக்கும்போது அவருக்கு பின்னால் வந்து கொண்டிருந்த எதிரி தனது ASHOK LEYLAND DOST TN 83 A 7822 வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து கோட்டீஸ்வரன் ஓட்டி சென்ற இருசக்கர வாகனத்தின் பின்பக்கம் மோதி விபத்து ஏற்படுத்தியும், எதிரி ஏற்படுத்திய விபத்தில் சாட்சி வனஜாவுக்கு வலது, இடது முழங்கை மற்றும் பின்பக்க முதுகில் சிராய்பு காயம் ஏற்படுத்தியும், எதிரி ஏற்படுத்திய விபத்தில் கோட்டீஸ்வரன் இருசக்கர வாகனத்தில் இருந்து தூக்கி வீசப்பட்டதில் பின்பக்க தலையில் அடிப்பட்டு பலத்த இரத்தகாயம் ஏற்பட்டு அதனால் மரணத்தை உண்டாக்கியதாகவும் அ.சா.7 இராமமூர்த்தி கடந்த 30.04.2020 நான் ஊத்தங்கரை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்து ஓய்வு பெற்றேன் அத்றகு முன்பாக 04.02.2018 ம் தேதி ஊத்தங்கரை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக திரு. சுப்பிரமணி என்பவர் நிலைய பொறுப்பில் இருந்தபோது வாதி வனஜா என்பவர் கொடுத்த புகார் மனுவினை பெற்று நிலைய குற்ற எண்.52/2018 இதச பிரிவுகள் 279, 337, 304A இதச வாக

வழக்கு பதிவு செய்தும் முதல் தகவல் அறிக்கை மற்றும் வாதியின் புகார் மனுவை கணம் ஊத்தங்கரை நீதித்துறை நடுவருக்கு அனுப்பி வைத்தும் ஒரு நகலை எனது விசாரணைக்கு வைத்தார். அவர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு வழக்கினை நான் புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு 05.02.2018 ம் தேதி காலை 6.00 மணிக்கு சம்பவ இடமான ஊத்தங்கரையில் இருந்து திருப்பத்தூர் தேசிய நெடுஞ்சாலை அருணபதி பிரிவு ரோடு சென்று சம்பவ இடத்தை சாட்சிகள் சத்தியமூர்த்தி மற்றும் சின்னதம்பி ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன் பார்வை மகஜரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். பார்வை மகஜர் அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் அன்றைய தினமே காலை 7.30 மணிக்கு ஊத்தங்கரை அரசு மருத்துவமனை சென்று அங்கு சவக்கிடங்கில் இருந்த கோட்டீஸவரன் என்பவரின் பிரேதத்தின் மீது சாட்சிகள் வனஜா, கலைச்செல்வன், தனசேகரன் லட்சுமணன் மற்றும் முருகன் ஆகியோர் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டேன். சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு கோட்டீஸவரன் பிரேதத்தை பிரேத பரிசோதனைக்காக தலைமை காவலர் எண் 742. திரு, சுரேஷ்குமார் என்பவர் மூலமாக மருத்துவரிடம் பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தேன். பிரேத பரிசோதனை முடிந்த பிறகு பிரேதத்தை உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. பின்பு எதிரி சரவணன் என்பவரை 05.02..2018 தேதி மதியம் 2.00 மணிக்கு ஊத்த்ங்கரை காவல் நிலையத்தில் ஆஜரானவரை கைது செய்து நிலைய பிணையில்

விடுவித்தேன். 07.02.2018 ம் தேதி எதிரி ஓட்டிவந்த அசோக் லைலேண்ட் லாரி TN83A7822 என்ற வாகனத்தை விபத்துக்கான காரணம் வேண்டி மோட்டார் வாகன ஆய்வாளரின் பரிசோதனைக்காக அனுப்பி வைத்தேன். இறந்துபோன கோட்டீஸ்வரன் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனம் TN 24 P 1833 TVS Scooty Pep வானத்தை 07.02.2018 ம் தேதி ஆய்வளாரின் பரிசோதனைக்காக அனுப்பி வைத்தேன். பின்பு இறந்துபோன கோட்டீஸ்வரன் என்பவரின் பிரேத பரிசோதனை அறிக்கை அரசு மருத்துவர் தியாகராஜன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் மோட்டார் வாகனங்களை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர்கள் திரு. குமார் மற்றும் திரு. சதிஸ்குமார் விசாரித்து ஆய்வறிக்கைகள் பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். ஆய்வறிக்கைகள் அ.சா.ஆ. 8 மற்றும் அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆய்வறிக்கை ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் காயம்பட்ட வாதி வனஜாவிற்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு.சுரேஷ்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று பெற்றேன். விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் அ.சா. ஆ. 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிரேதத்தை பிரேத விசாரணைக்காக எடுத்து சென்ற தலைமைக்காவலர் திரு. சுரேஷ்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர். திரு. சுப்பிரமணி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் வழக்கினை புலன்விசாரணையை முடித்து எதிரிக்கு எதிராக இதச பிரிவுகள் 279, 337, 304A ஆகியவற்றின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் அரசு தரப்பில் உள்ளது.

<u>**அரசுத்தரப்பு சாட்சிகள்:–**</u>

6. அரசுத்தரப்பில் நடந்த சம்பவம் பற்றி புகார் கொடுத்த அ.சா.1 வனஜா என்பவர் காயம்பட்டு இறந்துபோன கோடீஸ்வரனின் மனைவி ஆவார். இவர் சம்பவம் நடந்ததை நேரில் பார்த்தது பற்றியும் சம்பவத்தில் இறந்துபோன தனது கணவருக்கும் தனக்கும் ஏற்பட்ட காயங்கள் பற்றியும் அதனால் தனது கணவருக்கு ஏற்பட்ட மரணம் பற்றியும் காயம்பட்ட தங்களை அக்கம் பக்கம் இருந்தவர்கள் உதவியுடன் தனது மகன் ஆம்னி வாகனம் மூலம் ஊத்தங்கரை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றது பற்றியும் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த தன்னிடம் ஊத்தங்கரை போலீசார் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தது பற்றியும் தனது கணவரின் பிரேத விசாரணையின் போது சாட்சியாக உடனிருந்தது பற்றியும் கூறும் சாட்சியாக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அ.சா.2 கலைச்செல்வன் இறந்துபோன கோடீஸ்வரனின் மகன் ஆவார். சம்பவம் நடைபெற்றதை பற்றி போன் மூலம் தகவல் தெரிந்து கொண்டது பற்றியும் சம்பவயிடம் சென்று பார்த்தது பற்றியும், தன் தந்தையையும், தாயையும் அக்கம் பக்கம் இருந்தவர்கள் உதவியுடன் சிகிச்சைக்கு சேர்த்தது பற்றியும், தனது தந்தையை மருத்துவர் பரிசோதித்து விட்டு இறந்துவிட்டது பற்றி தெரிவித்தது பற்றியும், தந்தையின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை யின் போது உடனிருந்தது பற்றியும் கூறும் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.3 தனசேகரன் என்பவர் இறந்துபோன கோடீஸ்வரனின் மூத்த மருமகன் ஆவார். இவர் சம்பவம் நடைபெற்றதை பற்றி போன் மூலம் தகவல் தெரிந்து கொண்டது பற்றியும் அதன் பின் இறந்துபோன தனது மாமனாரின் உடலை ஊத்தங்கரை அரசு மருத்துவமனைக்கு வந்து பார்த்தது பற்றியும் இறந்துபோன தனது

மாமனாருக்கு ஏற்பட்ட காயங்கள் பற்றியும் அதனால் ஏற்பட்ட மரணம் குறித்து தனது மாமனாரின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணையின் போது சாட்சியாக உடனிருந்தது பற்றியும் கூறும் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.4 லட்சுமணன் என்பவர் இறந்துபோன கோடீஸ்வரனின் மச்சான் ஆவார். சம்பவம் நடைபெற்றதை பற்றி போன் மூலம் தகவல் தெரிந்து கொண்டது பற்றியும் அதன் பின் இறந்தபோன தனது மச்சானின் உடலை ஊத்தங்கரை அரசு மருத்துவமனை சென்று பார்த்தது பற்றியும் இறந்துபோன தனது மச்சானுக்கு ஏற்பட்ட காயங்கள் பற்றியும் அதனால் ஏற்பட்ட மரணம் குறித்தும் தனது மச்சானின் பிரேதத்தன் மீது பிரேத விசாரணையின் போது உடனிருந்தது பற்றியும் கூறும் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.5 முருகன் இறந்து போன கோடீஸ்வரனின் கடைசி மருமகன் ஆவார். இவர் சம்பவம் நடைபெற்றதை பற்றி போன் மூலம் தகவல் தெரிந்து கொண்டது பற்றியும் அதன் பின் இறந்து போன தனது மாமனாரின் உடலை ஊத்தங்கரை அரசு மருத்துவமனைக்கு வந்து பார்த்தது பற்றியும் இறந்துபோன தனது மாமனாருக்கு ஏற்பட்ட காயங்கள் பற்றியும் மாமனாரின் பிரேத்தின் மீது பிரேத விசாரணையின் போது சாட்சியாக உடனிருந்தது பற்றியும் கூறும் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.6 சின்னதம்பி என்பவர் கோடீஸ்வரனின் உறவினர் மற்றும் நண்பர் ஆவார். இவர்கள் சம்பவத்தை பற்றி போன் மூலம் தகவல் தெரிந்தது பற்றியும் காவல் ஆய்வாளர் தயார் செய்த பார்வைமகஜரில் சாட்சியாக கையொப்பம் செய்தது பற்றியும் கூறும் சாட்சியாக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் பார்வைமகஜரிலுள்ள 2வது கையொப்பம் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரி அ.சா.7 இராமமூர்த்தி என்பவர் வழக்கை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவயிடத்தை பார்வையிட்டு

மாதிரிவரைபடம் மற்றும் பார்வைமகஜர் தயார் செய்தும், இறந்து போன கோடீஸ்வரனின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை முடித்து பிரேத பரிசோதனைக்கு அனுப்பியது பற்றியும் பிரேத விசாரணை சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தது பற்றியும், விபத்து வாகனங்களை ஆய்வுக்கு அனுப்பியது பற்றியும் காயம்பட்ட வாதிக்கு காயச்சான்று பெற்று விபத்து வாகனங்களின் ஆய்வறிக்கையை பெற்று புலன்விசாரணையை முடித்து எதிரி மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்ததாகவும் அவர் மூலம் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும், பார்வைமகஜர் அ.சா.ஆ.4 ஆகவும், மாதிரிவரைபடம் அ.சா.ஆ5 ஆகவும், பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.6 ஆகவும், பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.7 ஆகவும், மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் அ.சா.ஆ. 8 மற்றும் அ.சா.ஆ.9 ஆகவும், விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்றிதழ்கள் அ.சா.ஆ.10 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**<u>எதிரி கு.வி.மு.ச. 313 (1) (ஆ) பிரிவின் கீழ் வினவுதல்:–</u>**

7. இவ்வழக்கில் அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிக்கு எதிராக அமைந்துள்ள சாட்சியங்கள் குறித்து கு.வி.மு.ச. 313 (1) (ஆ) பிரிவின் கீழ் வினவிய போது, அவற்றை எதிரி மறுத்துள்ளார். எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சி இல்லை என்று கூறப்பட்டுள்ளது. இருதரப்பும் கேட்கப்பட்டது.

**<u>ஆய்வுக்குரிய பிரச்சினை:–</u>**

8. இவ்வழக்கில் அரசுத்தரப்பில் எதிரி மீதான சட்டப்பிரிவு 279,337,304(A) இ.த.ச. பிரிவுகளின் படியான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

**<u>வாதுரைகள்:–</u>**

9. அரசுத்தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடுகையில் அரசு

தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் அனைவரும் எவ்வித முரண்பாடுகளும் இன்றி தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும், எனவே எதிரியை தண்டிக்க வேண்டுமென்று வாதிட்டார்.

10. எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடும் போது அரசுத்தரப்பு வழக்கு பொய் வழக்கு என்றும், வேண்டுமென்றே ஜோடிக்கப்பட்ட வழக்கு என்றும், எனவே அரசுத்தரப்பில் எதிரி மீதான குற்றச் செயல்கள் நிரூபிக்கப்படாததால், எதிரியை விடுதலை செய்ய வேண்டுமென்று வாதிட்டார்.

**<u>சாட்சியங்களின் மதிப்பீட்டல்:–</u>**

11. இவ்வழக்கில் அரசு தரப்பில் 13 சாட்சிகள் பட்டியலிடப்பட்டு 7 சாட்சிகள் அரசுத்தரப்பில் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ளனர். இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 வனஜா தனது முதல் விசாரணை சாட்சியத்தில் எதிரியை பார்த்தது இல்லை என்றும் கடந்த 04.02.2018 ம் தேதி தானும், தனது கணவரும் இருசக்கர வாகனத்தில் அரசம்பட்டிக்கு சென்றுவிட்டு மாலை 4.30 மணிக்கு வீட்டிற்கு வருவதற்கு கதவாணியில் இருந்து, தங்களுக்கு சொந்தமான டி.வி.எஸ் ஸ்கூட்டி வாகனத்தில் தனது கணவர் வாகனத்தை ஓட்ட தான் பின்னால் உட்கார்ந்து வந்தபோது, அருணபதி பிரிவு ரோட்டில் மாலை 4.50 மணிக்கு சென்று கொண்டு இருந்தபோது பிரிவு ரோட்டிற்கு வளைந்தபோது பின்னால் வந்து கொண்டிருந்த மினி டெம்போ வேகமாக வந்து, தங்கள் வாகனத்தின் மீது மோதியது என்றும், தானும், தனது கணவரும் தூக்கி வீசப்பட்டோம் என்றும், தனது கணவர் தலையில் பலத்த காயம் ஏற்பட்டு, மூக்கில் இரத்தம் வந்தது என்றும், தனக்கும், கை, கால் அடிப்பட்டு காயம் ஏற்பட்டது என்றும் அங்கு இருந்தவர்கள் தனது மகனுக்கு தகவல் சொல்லி தனது மகன் வந்து தங்களை ஊத்தங்கரை அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்து

சிகிச்சைக்காக சேர்த்தார் என்றும், மருத்துவர் தனது கணவரை பரிசோதித்து இறந்து விட்டதாக சொன்னார் என்றும், தான் சிகிச்சையில் இருந்த போது போலீசார் அங்கு வந்து வாக்குமூலம் பெற்றார் என்றும், அ.சா.ஆ.1 தன்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும், விபத்திற்கு காரணம் ஆஜர் எதரி வாகனத்தை வேகமாக ஓட்டி வந்தது தான் காரணம் என்றும் இது சம்மந்தமாக போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

12. இவ்வழக்கில் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள புகார் வாக்குமூலம் மற்றும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள முதல் தகவல் அறிக்கையினை கண்ணுற்றபோது சம்பவதேதி 04.02.2018 என்பதும் சம்பவ நேரம் 4.50 என்பதும் அறியமுடிகிறது. அ.சா.1 வனஜா தனது முதல்விசாரணை சாட்சியத்தில் விபத்து நடந்த தேதி 04.02.2018 ம் தேதி என்றும் சம்பவநேரம் 4.50 மணி என்றும் குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளார். எனவே, இவ்வழக்கில் சம்பவதேதி மற்றும் சம்பவநேரம் குறித்து அரசு தரப்பு அ.சா.1 வனஜாவின் சாட்சியம் மூலம் நிரூபித்துள்ளது அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக உள்ளது.

13. மேலும், அ.சா.1வனஜா தனது முதல் விசாரணை சாட்சியத்தில் அருணபதி பிரிவு ரோட்டில் வளைந்தபோது பின்னால் வந்துகொண்டிருந்த மினி டெம்போ வேகமாக வந்து தங்கள் வாகனத்தின் மீது மோதியதில் தனது கணவருக்கு பலத்த காயம் ஏற்பட்டு சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாக அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளித்துள்ளார். மேலும், அ.சா.1 வனஜா தனது முதல் விசாரணை சாட்சியத்தில் சம்பவ இடம் அருணபதி பிரிவு என்று குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளது அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக உள்ளது. மேலும்,

விபத்திற்கு காரணம் ஆஜர் எதிரி வாகனத்தை வேகமாக ஓட்டி வந்தது தான் என்று குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளதும் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக உள்ளது. எனினும், இவ்வழக்கில் அ.சா.1 வனஜா எதிரியை பார்த்ததில்லை என்று சாட்சியம் அளித்துள்ளது சற்று முரணாக உள்ளதாக நீதிமன்றம் கருதுகிறது.

14. இவ்வழக்கின் பிரேத விசாரணை சாட்சியான அ.சா.2 கலைச்செல்வன் தனது முதல்விசாரணை சாட்சியத்தில் தான் விவசாயம் செய்து வருகிறேன் என்றும் அ.சா.1 தனது அம்மா என்றும், கடந்த 04.02.2018 ம் தேதி ஞாயிற்று கிழமை மாலை தனது தந்தை கோட்டீஸ்வரன் இருசக்கர வாகனத்தில் தனது அம்மா வனஜாவை கதவாணி பஸ் நிறுத்தத்தில் இருந்து அழைத்து வர சென்று திரும்பி வரும்போது மாலை 4.50 மணிக்கு அருணபதி கூட்ரோடு அருகே வந்துக்கொண்டிருந்தபோது அவருக்கு பின்னே வந்த மினி டெம்போ இருசக்கர வாகனத்தில் மோதி விட்டதாக அங்கு இருந்தவர்கள் போன் மூலம் தகவல் சொன்னார்கள் என்றும் தான் சுமார் 5.00 மணிக்கு சம்பவயிடத்திற்கு வந்து பார்த்தேன் என்றும், தனது தந்தைக்கு தலையில் அடிப்பட்டு இருந்தது என்றும், மூக்கில், காதில் இரத்தம் வந்து சுயநினைவு இல்லாமல் இருந்தார் என்றும் தனது அம்மாவுக்கு கை,கால் சிராய்ப்பு காயம் இருந்தது என்றும், அதன் பிறகு சிகிச்சைக்காக தனியார் வாகனம் மூலம் ஊத்தங்கரை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம் என்றும் மருத்துவர் தனது தந்தை உடலை பரிசோதித்து அவர் இறந்து விட்டதாக கூறினார் என்றும், தனது அம்மா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார் என்றும் விபத்திற்கு காரணம் அதிவேகமாக வந்த டெம்போ தான் என்றும் இது சம்மந்தமாக போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

15. அ.சா.2 கலைச்செல்வன் தனது சாட்சியத்தில் சம்பவதேதி 04.02.2018 ம் தேதி ஞாயிற்றுகிழமை என்றும் சம்பவ நேரம் 04.50 மணி என்றும் சம்பவயிடம் அருணபதி கூட்ரோடு அருகே என்றும் விபத்தில் இறந்துபோன கோடீஸ்வரனின் வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியது மினி டெம்போ என்றும் விபத்தின் காரணமாக கோடீஸ்வரன் இறந்து விட்டார் என்றும் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளித்துள்ளார்.

16. இவ்வழக்கின் மற்றொரு பிரேத விசாரணை சாட்சியான அ.சா.3 தனசேகரன் தனது முதல் விசாரணை சாட்சியத்தில் தான் நடத்துனராக பணிபுரிகிறேன் என்றும், அ.சா.1 தனது மாமியார் என்றும், இறந்து போன கோடீஸ்வரன் தன் மாமனார் என்றும் கடந்த 04.02.2018 ம் தேதி மாலை 5.00 மணியளவில் தான் போச்சம்பள்ளியிலிருந்தபோது தன் மச்சான் கலைச்செல்வன் போன் செய்து அருணபதி கூட்டுரோடு அருகே தன் மாமனார் மற்றும் மாமியார் இருசக்கர வாகனத்தில் தன் மாமனார் ஓட்டி செல்ல பின்னால் தன் மாமியார் உட்கார்ந்து சென்று கொண்டிருந்தபோது பின்னால் வந்த ஈச்சர் லாரி அவர்கள் வாகனத்தின் மீது வேகமாக வந்து மோதிவிட்டதாக தகவல் சொன்னார்கள் என்றும் தான் ஊத்தங்கரை அரசு மருத்துவமனைக்கு வந்து அவரை பார்த்தேன் என்றம், அப்போது தன் மாமனார் இறந்துவிட்டார் என்றும், தன் மாமியாருக்கு வலது மற்றும் இடது கை, நெற்றி ஆகிய இடங்களிலும் அடிப்பட்டிருந்தது என்றும் இடுப்பு பகுதியில் அடிப்பட்டிருந்தது என்றும் பின் மேல்சிசிச்சைக்காக பெங்களுர் ஜான்சன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார் என்றும், இது சம்மந்தமாக போலீசார் விசாரித்தார்கள் என்றும் விபத்து ஏற்படுத்திய வாகனத்தை சரவணன் என்பவர் ஓட்டி வந்ததாக சொன்னார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

17. அ.சா.3 தனசேகரன் தனது சாட்சியத்தில் சம்பவதேதி 04.02.2018 ம் தேதி ஞாயிற்றுகிழமை என்றும் சம்பவ நேரம் 04.50 மணி என்றும் சம்பவயிடம் அருணபதி கூட்ரோடு அருகே என்றும் விபத்தில் இறந்துபோன கோடீஸ்வரனின் வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியது ஈச்சர் லாரி என்றும் விபத்தின் காரணமாக கோடீஸ்வரன் இறந்து விட்டார் என்றும் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளித்துள்ளார்.

18. இவ்வழக்கின் மற்றொரு பிரேத விசாரணை சாட்சியான அ.சா.4 லட்சுமணன் தனது முதல்விசாரணை சாட்சியத்தில் அ.சா.1 யை தெரியும் என்றும், இந்த வழக்கில் இறந்துபோன கோடீஸ்வரன் தனது மச்சான் என்றும் சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்பு தான் தனது வீட்டிலிருந்தபோது விபத்து ஏற்பட்டு கோடீஸ்வரன் இறந்து போய் விட்டதாக கேள்விபட்டு ஊத்தங்கரை அரசு மருத்துவமனையில் வந்து பார்த்தேன் என்றம், அடுத்த நாள் பிரேத பரிசோதனை செய்து தங்களிடம் கொடுத்தார்கள் என்றும் போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

19. அ.சா.4 லட்சுமணன் தனது முதல்விசாரணை சாட்சியத்தில் விபத்தின் காரணமாக கோடீஸ்வரன் இறந்து விட்டார் என்று அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளித்துள்ளார்.

20. இவ்வழக்கின் மற்றொரு பிரேத விசாரணை சாட்சியான அ.சா.5 முருகன் தனது முதல் விசாரணை சாட்சியத்தில் தான் தற்போது கோட்டபதியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன் என்றும் அ.சா.1 யை தெரியும் என்றும் அவர் தனது மாமியார் என்றும் 04.02.2017அன்று மதியம் 3.00 மணியளவில் தனது மச்சான் கலைச்செல்வன் தனக்கு போன் செய்து தனது அப்பாவிற்கு விபத்து ஏற்பட்டதாக தெரிவித்தார் என்றும் தான் சம்பவயிடத்திற்கு வருவதற்குள் அவரை ஊத்தங்கரை அரசு

மருத்துவமனைக்கு கொண்டு சென்று விட்டார்கள் என்றும் அங்கு வைத்து அவர் இறந்து விட்டார். மாமியார் வனஜாவிற்கு கையிலும், காலிலும் விபத்தின் போது அடிப்பட்டிருந்தது என்றும் போலீசார் தன்னை விசாரணை செய்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

21. அ.சா.5 முருகன் தனது முதல்விசாரணை சாட்சியத்தில் விபத்தின் காரணமாக கோடீஸ்வரன் இறந்து விட்டார் என்று அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளித்துள்ளார்.

22. இவ்வழக்கின் பார்வைமகஜர் சாட்சியான அ.சா.6 சின்னதம்பி தனது முதல் விசாரணை சாட்சியத்தில் தான் தற்போது காரப்பட்டில் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், தன்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.2 பார்வைமகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து தன்னுடையதுதான் என்றம் இந்த கையொப்பத்தை தான் ஊத்தங்கரை அரசு மருத்துவமனையில் கோடீஸ்வரன் இறந்ததற்கான இந்த கையொப்பம் வாங்கினார்கள் என்றும் போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் பிறழ்சாட்சியம் அளித்துள்ளார்.

23. இவ்வழக்கில் அ.சா.6 சின்னதம்பி தான் ஊத்தங்கரை அரசு மருத்துவமனையில் பார்வைமகஜரில் கையொப்பம் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளதும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளதும் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக இல்லை.

24. இவ்வழக்கின் அ.சா.7 இராமமூர்த்தி தனது முதல் விசாரணை சாட்சியத்தில் கடந்த 30.04.2020 தான் ஊத்தங்கரை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்து ஓய்வு பெற்றேன் அதற்கு முன்பாக 04.02.2018 ம் தேதி ஊத்தங்கரை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக திரு. சுப்பிரமணி என்பவர் நிலைய பொறுப்பில் இருந்தபோது வாதி வனஜா என்பவர் கொடுத்த புகார் மனுவினை பெற்று நிலைய குற்ற

எண்.52/2018 இதச பிரிவுகள் 279, 337, 304A இதச வாக வழக்கு பதிவு செய்தும் அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை மற்றும் வாதியின் புகார் மனுவை கணம் ஊத்தங்கரை நீதித்துறை நடுவருக்கு அனுப்பி வைத்தும் ஒரு நகலை தனது விசாரணைக்கு வைத்தும், பின்பு வழக்கினை தான் புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு 05.02.2018 ம் தேதி காலை 6.00 மணிக்கு சம்பவ இடமான ஊத்தங்கரையில் இருந்து திருப்பத்தூர் தேசிய நெடுஞ்சாலை அருணபதி பிரிவு ரோடு சென்று சம்பவ இடத்தை சாட்சிகள் சத்தியமூர்த்தி மற்றும் சின்னதம்பி ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு அ.சா.ஆ.4 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.5 மாதிரி வரைபடம் தயார் செய்து பார்வை மகஜரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றும் பின்னர் அன்றைய தினமே காலை 7.30 மணிக்கு ஊத்தங்கரை அரசு மருத்துவமனை சென்று அங்கு சவக்கிடங்கில் இருந்த கோட்டீஸ்வரன் என்பவரின் பிரேதத்தின் மீது சாட்சிகள் வனஜா, கலைச்செல்வன், தனசேகரன் லட்சுமணன் மற்றும் முருகன் ஆகியோர் முன்னிலையில் அ.சா.ஆ.6 பிரேத விசாரணை அறிக்கை மேற்கொண்டும், சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும் பின்பு கோட்டீஸ்வரன் பிரேதத்தை பிரேத பரிசோதனைக்காக தலைமை காவலர் எண் 742. திரு, சுரேஷ்குமார் என்பவர் மூலமாக மருத்துவரிடம் பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தும், பிரேத பரிசோதனை முடிந்த பிறகு பிரேதத்தை உறவினர்களிடம் ஒப்படைத்தும், பின்பு எதிரி சரவணன் என்பவரை 05.02..2018 தேதி மதியம் 2.00 மணிக்கு ஊத்த்ங்கரை காவல் நிலையத்தில் ஆஜரானவரை கைது செய்து நிலைய பிணையில் விடுவித்தும், 07.02.2018 ம் தேதி எதிரி ஓட்டிவந்த அசோக் லைலேண்ட் லாரி TN83A7822 என்ற வாகனத்தை விபத்துக்கான காரணம் வேண்டி மோட்டார் வாகன ஆய்வாளரின் பரிசோதனைக்காக அனுப்பி வைத்தும்,

இறந்துபோன கோட்டீஸ்வரன் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனம் TN 24 P 1833 TVS Scooty Pep வானத்தை 07.02.2018 ம் தேதி ஆய்வளாரின் பரிசோதனைக்காக அனுப்பி வைத்தும், பின்பு இறந்துபோன கோட்டீஸ்வரன் என்பவரின் அ.சா.ஆ.7 பிரேத பரிசோதனை அறிக்கை அரசு மருத்துவர் தியாகராஜன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும், பின்னர் மோட்டார் வாகனங்கனை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர்கள் திரு. குமார் மற்றும் திரு. சதிஸ்குமார் விசாரித்து அ.சா.ஆ.8 மற்றும் அ.சா.ஆ.9 மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் பெற்று வாக்குமூலம் பதிவு செய்தும் பின்னர் காயம்பட்ட வாதி வனஜாவிற்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு.சுரேஷ்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேடுடன் கூடிய அ.சா.ஆ.10 காயச்சான்று பெற்றும் பிரேதத்தை பிரேத விசாரணைக்காக எடுத்து சென்ற தலைமைக்காவலர் திரு. சுரேஷ்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும், பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர். திரு. சுப்பிரமணி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும், பின்னர் வழக்கினை புலன்விசாரணையை முடித்து எதிரிக்கு எதிராக இதச பிரிவுகள் 279, 337, 304A ஆகியவற்றின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.7 இராமமூர்த்தியின் முதல்விசாரணை சாட்சியம் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக உள்ளது.

25. இவ்வழக்கில் அ.சா.2 கலைச்செல்வன் மற்றும் அ.சா.3 தனசேகரன் அ.சா.4 லட்சுமணன், அ.சா.5 முருகன் ஆகியோர் தங்களது முதல் விசாரணையில் சம்பவநேரம், சம்பவதேதி, சம்பவயிடம் மற்றும் விபத்தின் காரணமாக கோடீஸ்வரன் இறந்து விட்டார் என்பது குறித்து ஒருமித்து சாட்சியம் அளித்துள்ளனர். மேலும், இவ்வழக்கின்

புலன்விசாரணை அதிகாரியான அ.சா.7 இராமமூர்த்தியின் முதல் விசாரணை சாட்சியமும் அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகளின் சாட்சியங்களுக்கு ஒத்துள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, இவ்வழக்கில் சம்பவயிடம், சம்பவநேரம், சம்பவதேதி விபத்துக்குள்ளான வாகனங்கள் மற்றும் விபத்தின் காரணமாக மேற்படி கோடீஸ்வரன் இறந்துள்ளார் என்பது குறித்து அரசு தரப்பு சாட்சிகளிடையே முரண்பாடுகளின்றி தெளிவாக நிருபிக்கப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

**26. Section 279 I.P.C – Rash driving or riding on a public way**

Whoever drives any vehicle or rides on any public way in a manner so rash or negligent as to endanger human life or to be likely to cause hurt or injury to any other person.

**27. Section 337 I.P.C –Causing hurt by act endangering life or personal safety of others.**

Whoever causes grievous hurt to any person by doing any act so rashly or negligently as to endanger human life, or the personal safety of others

**28. Section 304A I.P.C – Causing death by negligence**

Whoever causes the death of any person by doing any rash or negligent act not amounting to culpable homicide.

எதிரிக்கெதிராக இவ்வழக்கில் இ.த.ச பிரிவு 279,337,304A–ன் படியான குற்றம் நிரூபிக்கப்பட்டுள்ளதா ?

29. (Res ipsa loquitur – The thing speaks for itself–செயலே விளக்குகிறது விதி) The principle that the mere occurence of some types of accident is sufficient to imply negligence என்ற விதியின் படி ஆராய்ந்தபோது இவ்வழக்கில் அ.சா.2 முதல் அ.சா6 வரையிலானோரின் சாட்சியம் அரசு தரப்பு வழக்கிற்கு

ஆதரவாக முதல் விசாரணையில் சாட்சியம் அளித்திருந்தாலும் தங்களது குறுக்குவிசாரணை சாட்சியத்தில் அ.சா.2 கலைச்செல்வன் விபத்தை தான் நேரில் பார்க்கவில்லை தகவல் சொல்லி தான் தெரியும் என்றால் சரிதான் என்றும், இவ்வழக்கில் அ.சா.3 தனசேகரன் விபத்தை தான் நேரில் பார்க்கவில்லை தகவல் சொல்லி தான் தெரியும் என்றால் சரிதான் என்றும், இவ்வழக்கின் அ.சா.4 லட்சுமணன் சம்பவத்தை தான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான் என்றும் சாட்சியம் அளித்துள்ளனர். எனவே, இவ்வழக்கில் அ.சா.2 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் கேள்விநிலை சாட்சியம் என்பதால் மேற்படி சாட்சிகள் அ.சா.2 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் வலுவான சாட்சியங்களாக கருத இயலாது. இவ்வழக்கில் அ.சா.1 வனஜா கண்ணுற்ற சாட்சியம் என்பதால் அ.சா.1 வனஜாவின் சாட்சியம் மிக முக்கியமானதென இந்நீதிமன்றம் கருதுகிறது. இவ்வழக்கில் அ.சா.1 வனஜா தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் விபத்து நடந்த சமயத்தில் வயது 70 இருக்குமா என்றால் இருக்கும் என்றும் விபத்து நடந்த சமயத்தில் அருணபதி கூட்ரோடு அருகே தானும் தன் கணவரும் நின்று கொண்டிருந்தோம் என்றால் சரிதான் என்றும், தங்கள் ஊருக்கு செல்வதற்காக மேற்கிலிருந்து கிழக்காக சாலையை கடந்தோம் என்றால் சரிதான் என்றும் நாங்கள் சொல்லும் வாகனம் ஊத்தங்கரையிலிருந்து திருப்பத்தூர் செல்லும் வாகனம் என்றால் சரிதான் என்றும் அந்த பாதை ஒரு வழி பாதை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

30. இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரியான அ.சா.7 இராமமூர்த்தி தனது குறுக்குவிசாரணை சாட்சிய்ததில் விபத்து நடந்தயிடம் ஊத்தங்கரையிலிருந்து திருப்பத்தூர் செல்லும் சாலை தெற்கிலிருந்து வடக்காக செல்லும் மாநில நெடுஞ்சாலை என்றால் சரிதான் என்றும் விபத்து நடந்த பகுதியிலிருந்து அருணபதி சாலை எவ்வளவு தூரத்தில்

பிரிகிறது என்றால் 5 அடி தூரத்தில் பிரிவு ரோடு வருகிறது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும், அ.சா.1 வனஜா தன்னுடைய வாக்குமூலத்தில் சாலையில் இடதுபுறத்திலிருந்து வலது பக்கம் திரும்பி அருணபதி ரோடு சென்றபோது விபத்து ஏற்பட்டதாக கூறியுள்ளார் என்றால் சரிதான் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

31. இவ்வழக்கில் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள மாதிரிவரைபடத்தை கண்ணுற்றபோது ஊத்தங்கரையிலிருந்து திருப்பத்தூர் செல்லும் பாதை தெற்கு வடக்காக உள்ளதும், அருணபதி சாலை வலது புறம் கிழக்காக உள்ளதும் அறியமுடிகிறது. இவ்வழக்கில் அ.சா.1 வனஜா அருணபதி செல்லும் சாலைக்கு மேற்கிலிருந்து கிழக்காக சாலையை கடந்தோம் என்றும் மோதிய வாகனம் ஊத்தங்கரையிலிருந்து திருப்பத்தூர் நோக்கி செல்லும் வாகனம் என்றும் குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளார்.

32. இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரி தன்னுடைய சாட்சியத்தில் அருணபதி சாலை விபத்து நடந்த இடத்திலிருந்து 5 அடி தூரத்தில் பிரிவு ரோடு வருகிறது என்றும், கிழக்கு நோக்கி செல்லும் சாலையில் அருணபதி சாலை உள்ளது என்றும் சாட்சியம் அளித்துள்ளதால் இருசக்கர வாகனத்தில் வந்த கோடீஸ்வரன் மற்றும் அவரது மனைவி அ.சா.1 வனஜா ஆகியோர் ஊத்தங்கரையிலிருந்து திருப்பத்தூர் செல்லும் தெற்கு வடக்காக உள்ள சாலையிலிருந்து அருணபதி செல்லும் சாலைக்கு மேற்கிலிருந்து கிழக்காக சாலையை கடக்கும்போது விபத்து ஏற்பட்டுள்ளது என்பதும் எதிரி ஓட்டி வந்த ஈச்சர் நான்கு சக்கர வாகனம் திருப்பத்தூரிலிருந்து ஊத்தங்கரை நோக்கி வந்து கொண்டிருந்ததும் சாட்சிகளின் சாட்சியங்கள் மூலம் அறியமுடிகிறது. இவ்வழக்கில் எதிரி திருப்பத்தூரிலிருந்து ஊத்தங்கரை நோக்கி வந்து

கொண்டிருந்தபோது விபத்து நடந்ததாக அரசு தரப்பில் உள்ளநிலையில் எதிரி தரப்பு வழக்கறிஞர் தனது வாதுரையில் எதிரி சரியான திசையில் தான் வாகனத்தை ஓட்டி வந்தார் என்று குறிப்பிட்டுள்ளது ஏற்ககூடியதாக உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

33. மேலும், இவ்வழக்கில் இறந்து போன கோடீஸ்வரன் மற்றும் அவரது மனைவி அ.சா.1 வனஜா ஆகியோர் வந்த வாகனம் நெடுஞ்சாலையிலிருந்து அருணபதி செல்வதற்கு மேற்கிலிருந்து கிழக்காக சென்றபோது விபத்து ஏற்பட்டுள்ளது. மேற்படி, மேற்கிலிருந்து கிழக்காக சென்ற கோடீஸ்வரன் சமிஞ்சை எதுவும் செய்தாரா என்பது குறித்து அரசு தரப்பு சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. எனவே, இவ்வழக்கில் சமிஞ்சை செய்யாமல் மேற்கிலிருந்து கிழக்கில் இருசக்கர வாகனம் சென்றபோது விபத்து ஏற்பட்டதா என்ற ஐயம் எழுகிறது என்ற எதிரி தரப்பு வாதம் ஏற்ககூடியதாக உள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. இவ்வழக்கில் அ.சா.1 வனஜா எதிரி வாகனத்தை வேகமாக ஓட்டி வந்தது தான் விபத்திற்கு காரணம் என்று சாட்சியம் அளித்திருந்தாலும், அரசு தரப்பில் இருசக்கர வாகனத்தில் வந்தவர்கள் சமிஞ்சை அல்லது வலது பக்கம் திரும்புவதற்கான கை காட்டி திரும்புதல் போன்றவற்றை செய்தார்கள் என்பது குறித்து அரசு தரப்பு எதுவும் குறிப்பிடாததால் எதிரி வேகமாக வாகனத்தை ஓட்டி வந்தார் என்பது குறித்து சந்தேகங்கள் எழுகிறது. மேலும், அ.சா.7 இராமமூர்த்தி தனது குறுக்குவிசாரணை சாட்சியத்தில் விபத்தில் இறந்துபோன கோடீஸ்வரன் என்பவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்று சாட்சியம் அளித்திருப்பதும் அரசு தரப்பிற்கு சாதகமாக இல்லை. எனவே, இவ்வழக்கில் அரசு தரப்பில் எதிரி அஜாக்கிரதையாக வாகனத்தை ஓட்டி வந்தார் என்று தகுந்த சாட்சியத்துடன் நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

34. முடிவாக, இவ்வழக்கின் மீது எழும் சந்தேகங்களின் பலனை எதிரிக்கு வழங்கி எதிரியை 279, 337, 304(A) இ.த.ச. பிரிவுகளின் படி குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து, எதிரியை கு.வி.மு.ச. 255(1) பிரிவின் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. எதிரியிடமிருந்து பெற்ற பிணையமானது மேல் முறையீட்டுக் காலத்திற்கு பின்னிட்டு தானாகவே ரத்தாகிவிடும் என உத்தரவிடப்படுகிறது.

35. இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படவில்லை. எனவே இது குறித்து உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தி சரிபார்க்கப்பட்டு 2026-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18-ம் நாள் என்னால் திறந்த இந்த நீதிமன்ற அவையில் அவையறிய பகரப்பட்டது.

D SARAVANAN Digitally signed by D SARAVANAN

நீதித்துறை நடுவர்,
ஊத்தங்கரை

**<u>அரசுத்தரப்பு சாட்சிகள்:-</u>**

1) அ.சா.1 - திருமதி. வனஜா
2) அ.சா.2 - திரு.கலைச்செல்வன்
3) அ.சா.3 - திரு.தனசேகரன்
4) அ.சா.4 - திரு.லட்சுமணன்
5) அ.சா.5 - திரு.முருகன்
6) அ.சா.6 - திரு.சின்னதம்பி

7) அ.சா.7 திரு.இராமமூர்த்தி

**<u>அரசுத்தரப்பு சான்றாவணங்கள்:–</u>**

1) அ.சா.ஆ.1 – புகார் வாக்குமூலம்

2) அ.சா.ஆ.2 – பார்வைமகஜரிலுள்ள அ.சா.6 ன் இரண்டாவது கையொப்பம்

3) அ.சா.ஆ.3 – முதல் தகவல் அறிக்கை

4) அ.சா.ஆ.4 – பார்வைமகஜர்

5) அ.சா.ஆ.5 – மாதிரிவரைபடம்

6) அ.சா.ஆ.6 – பிரேத விசாரணை அறிக்கை

7) அ.சா.ஆ.7 – பிரேத பரிசோதனை அறிக்கை

8) அ.சா.ஆ.8 – மோட்டார் வாகன ஆய்வறிக்கை

9) அ.சா.ஆ.9 – மோட்டார் வாகன ஆய்வறிக்கை

10) அ.சா.ஆ.10 – விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்றிதழ்

**<u>அரசு தரப்பு சான்றுபொருள்:–</u>** இல்லை

**<u>எதிரி தரப்பு சாட்சி :–</u>** இல்லை

**<u>எதிரி தரப்பு சான்றாவணம்:–</u>** இல்லை

D SARAVANAN Digitally signed by D SARAVANAN

நீதித்துறை நடுவர்,
ஊத்தங்கரை

**<u>பின்குறிப்பு:–</u>**

1. எதிரி பிணையில் இருந்து முன்னிலையானார்.

2. எந்த சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தப்படவில்லை.

3. வழக்கு முடிவு குறித்து காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

**<u>நகல்:</u>**

கிருஷ்ணகிரி மாண்பமை தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

D SARAVANAN

Digitally signed by D SARAVANAN